புதுக்கோட்டை தேவஸ்தான ஊழியர்கள் ஊதிய உயர்வு கிடைக்கவில்லை என்ற அதிருப்தியில் நேரடி நடவடிக்கையில் இறங்கியிருப்பது குறித்து

1974 ஏப்ரல் 11]

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : துணைத் தலைவரவர்களே, ஊழியர்களை அதிகமாக வைத்துக்கொண்டு சம்பளம் கொடுக்க முடியாது ; வேறு வசதிகள் செய்து கொடுக்க முடியாதென்று சொன்னால், மாற்று வழி பற்றி ஆலோசிக்க வேண்டும். அவர்கள் கஷ்டப்படுகிறார்கள். எனவே எண்ணிக்கை அதிகமென்று கருதினால், வேலைக் குறைப்பு செய்யலாமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : துணைத் தலைவரவர்களே, வேலைக் குறைப்பு செய்தாலும், அதை வேண்டாமென்று சொல்பவர்கள் நம்முடைய அடிகளார் அவர்களிடத்தில் முறையிட்டால், அவர்களே இங்கே அதுபற்றி முறையிடுவார்கள். கன்னியாகுமரி தேவஸ்வம் போர்டில் சென்ற இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு வேலைக் குறைப்பு செய்ய வேண்டுமென்று யோசனை செய்த நேரத்தில், பொது மக்களின் பிரதிநிதிகள் வேண்டாமென்று சொன்ன காரணத்தால், மேற்கொண்டு புதிதாக ஊழியர்களை நியமிக்கக்கூடாதென்று முடிவெடுத்தோம். அந்த மாதிரி புதுக்கோட்டை திருகோகர்ணம் விஷயத்திலும் பின்பற்றலாமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

5. அரசின் தீர்மானம்

அலுவல் வரிசையில் மாற்றம்

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு தலைவரவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"மேலவை விதி 21 (3)-ன் படி இன்றைய நிகழ்ச்சி நிரலில் இடம் பெற்ற அரசின் தீர்மானம் மற்றொரு கூட்டத்திற்குத் தள்ளி வைக்கப்பட வேண்டும்".

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவையின் முன் உள்ள பிரச்சினை—

"மேலவை விதி 21(3)-ன் படி இன்றைய நிகழ்ச்சி நிரலில் இடம் பெற்ற அரசின் தீர்மானம் மற்றொரு கூட்டத்திற்குத் தள்ளி வைக்கப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.